# குழந்தைகள் தின விழா

நம் பள்ளியின் சார்பாக நவம்பர் 14ஆம் தேதி அன்று குழந்தைகள் தின விழா கொண்டாப்பட்டது. அதில் நம் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு இறை வணக்கம், இன்றைய சிந்தனை க்கு, மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் பாடல் போன்றவற்றை வழங்கியதோடு ஆசிரியர்கள் பங்கேற்ற பட்டிமன்றமும் நடைபெற்றது, நடுவராக நம் பள்ளியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தமிழாசிரியை திருமதி ஜெயலட்சுமி கலந்து கொண்டு நல்ல தீர்ப்பினை வழங்கினார். பள்ளியின் முதல்வர் அவர்களும் துணை முதல்வர் அவர்களும் குழந்தைகள் தின வாழ்த்துறை வழங்கினர். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவேறியது.